# தொண்ணூறும் தொள்ளாயிரமும்

ஆசிரியர் :

புலவர் சுந்தர சண்முகனார்

புதுச்சேரி

வெளியீடு :

புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்

புதுச்சேரி - 1.

# தொண்ணூறும் தொள்ளாயிரமும்

[ 'தொல்காப்பியமும் உரையாசிரியர்களும்', 'மொழியியல்' என்னும் இரு துறைகளைச் சார்ந்தது. ]

★

இஃது
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1971 சூன் திங்களில் நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் மூன்றாவது கருத்தரங்கில் படிக்கப்பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரையின் விரிவு.

★


கட்டுரை யாசிரியர்:
புலவர் சுந்தர சண்முகனார்
61-C, வைசியர் தெரு, புதுச்சேரி-1.
Pondicherry-1. South India.


விலை : 75 காசு

## ‘தொண்ணூறும் தொள்ளாயிரமும்’

ஆசிரியரின் ஐம்பத்தோராவது வெளியீடு

சூன் 1971.

---

## மதிப்பாய்வுரை:

*சுந்தர சண்முகனார் எழுதி வெளியிட்டுள்ள “தமிழ் இலத்தீன் பாலம்”* (Bridge Between Tamil And Latin) *என்னும் நூலில், ‘தொண்ணூறும் தொள்ளாயிரமும்’ என்பது பற்றிய ஆய்வு, வேறு தலைப்பின்கீழ் இடையே இடம் பெற்றுள்ளது. ‘தமிழ் இலத்தீன் பாலம்’ நூல் பற்றி* “The Hindu” *(22—11—1970)* நாளிதழில் வெளிவந்துள்ள *113* வரிகள் கொண்ட மதிப்பாய்வுரையில் (Review), *‘தொண்ணூறும் தொள்ளாயிரமும்’ என்னும் ஆராய்ச்சி பற்றிக் கூறியுள்ள மதிப்புரைப் பகுதி மட்டும் வருமாறு :-*

“ ……… The etymology of the Tamil terms used for the expression of the numbers 9, 90, 900, etc. has long been a matter of controversy among Tamil scholars. But Sundara Shanmuganar has found a parallelism in Latin which he discusses in a scholarly way to explain his theory which is quite convincing………”

---

இளங்கோ அச்சகம், புதுச்சேரி-1.

# 3

# தொண்ணூறும் தொள்ளாயிரமும்

இப்போது உலக மக்கள் பெரும்பாலாரால் *1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10* என்னும் எண் வடிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை 'அரபு எண்கள்', 'இந்திய எண்கள்', 'இந்திய—அரபு எண்கள்' என்றெல்லாம் பிறப்பிடப் பெயர்கள் சூட்டப் படுகின்றன. தமிழ் எண்கள் இவற்றினும் வேறு. அவை வருமாறு :-

| | | |
|---|---|---|
| க (ஒன்று) | எ (ஏழு) | வ (கால் $=\frac{1}{4}$) |
| உ (இரண்டு) | அ (எட்டு) | ? (அரை $=\frac{1}{2}$) |
| ௩ (மூன்று) | ௯ (ஒன்பது) | ெத (முக்கால் $=\frac{3}{4}$) |
| ௪ (நான்கு) | ௰ (பத்து) | வத (முந்திரி $=\frac{1}{320}$) |
| ரு (ஐந்து) | ௱ (நூறு) | ப (ஒருமா $=\frac{1}{20}$) |
| ௬ (ஆறு) | ௲ (ஆயிரம்) | |

மேலே தரப்பட்டுள்ள தமிழ் எண்களை நோக்கின், அவை தமிழ் எழுத்துக்களாகவே இருப்பது புலனாகும். அதாவது, 'க' என்னும் எழுத்து ஒன்றையும், 'உ' என்பது இரண்டையும், 'ரு' ஐந்தையும், 'எ' ஏழையும், 'அ' எட்டையும் குறிக்கின்றன. 'ங' என்பதில் இறுதிக் கோடு குறைந்தால் (௩) மூன்றைக் குறிக்கும். 'ச' என்பதின் இறுதியில் மேலே ஒரு கோடு ஏற்றிவிட்டால் (௪) நான்கைக் குறிக்கும். 'ச' என்பதின் இறுதியில் வேறொரு வகை மாறுதல் செய்தால் (௬) ஆறைக் குறிக்கும். 'க' என் பதின் இறுதியில் ஒரு வளைவு இணைத்தால் (௯)

ஒன்பதைக் குறிக்கும். 'ய' என்பதின் மேலே ஒரு கோடு வளைத்தால் (ம)பத்தைக் குறிக்கும். இன்னும் இவ்வாறே தமிழில் பெரிய எண்களும், பின்ன எண்களும் தமிழ் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் காணலாம்.

தமிழ் போலவே இலத்தீனிலும் எண்கள் எழுத்துக்களாலேயே குறிக்கப்படுவது வியப்பாயிருக்கிறது. இலத்தீன் எண்கள் 'ரோமன் எண்கள்' (**Roman Numbers**) என்று சொல்லப்படுகின்றன. அவை வருமாறு :-

| | | | |
|---|---|---|---|
| I | (1) | VIII | (8) |
| II | (2) | IX | (9) |
| III | (3) | X | (10) |
| IV | (4) | L | (50) |
| V | (5) | C | (100) |
| VI | (6) | D | (500) |
| VII | (7) | M | (1000) |

மேலே, இலத்தீன் மொழி எழுத்துக்களுள் **I, V, X, L, C, D, M** ஆகிய எழுத்துக்கள் எண்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்வெழுத்துக்களை இணைத்து மற்ற மற்ற பெரிய எண்களும் குறிக்கப்படுகின்றன, எடுத்துக் காட்டாக :-

ccıↄↄ = *10,000* (பதினாயிரம்)
cccıↄↄↄ = *100,000* (நூறாயிரம்-இலட்சம்)
ccccıↄↄↄↄ = *1,000,000* (பத்து நூறாயிரம்-பத்து இலட்சம்)

மேலே, 'C' என்னும் எழுத்தைக் கொண்டும், அதையே பக்கவாட்டத்தில் திருப்பிப் போட்டும் பெரிய எண்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காண லாம்.

எழுத்துக்களால் எண்கள் குறிக்கப்படுவதில் தமிழிலும் இலத்தீனிலும் ஒற்றுமை இருப்பது போலவே, மற்றொரு வகை ஒற்றுமையும் இந்த எண் அமைப்பிலேயே உய்த்துணரக் கிடக்கிறது. அது வருமாறு:-

ஒரு பெரிய எண்ணுக்குப் பின்னால் ஒரு சிறிய எண் போட்டால் கூட்டிக்கொள்ள வேண்டும் என்பது, எந்த மொழியிலுமே ஒரு பொது நெறி. எடுத்துக்காட்டு:-

தமிழ்: இருபது + ஐந்து = இருபத்தைந்து = $20+5=25$.

இலத்தீன்: Viginti + quinque = Viginti quinque = $20+5=25$.

ஆங்கிலம்: Twenty + five = Twenty five = $20+5=25$.

பிரெஞ்சு: Vingt + cinq = Vingt-cinq = $20+5=25$.

இவ்வாறாக, பெரிய எண்ணுக்குப் பின்னால் சிறிய எண் போட்டால் கூட்டிக்கொள்ள வேண்டும் என்னும் பொதுநெறி யிருக்க, —இலத்தீனில் சில பெரிய எண்களுக்கு முன்னால் சிறிய எண் போட்டால் கழித்துக்கொள்ள வேண்டியுள்ளது. எடுத்துக் காட்டு:-

இலத்தீனில் 'V' என்பது ஐந்தையும், 'I' என்பது ஒன்றையும் குறிக்கும்; 'V' என்பதற்கு முன்னால் 'I' என்பதைப்போட்டு 'IV' என எழுதினால், ஐந்தில் ஒன்று கழிய, 'நான்கு' (IV = 4) எனப் பொருள்படும். இதுபோலவே, பத்தைக் குறிக்கும் 'X' என்பதற்கு முன்னால் 'I' இதைப் போட்டு 'IX' என எழுதினால், பத்தில் ஒன்று கழிய, 'ஒன்பது' (IX = 9) எனப் பொருள்படும். மற்றும், 'C' என்பது நூறையும் 'X' என்பது பத்தையும் குறிக்கும்; 'C' என்பதற்கு முன்னால் 'X' என்பதைப்போட்டு 'XC' என எழுதின், நூறில் பத்து கழிய, 'தொண்ணூறு' (XC = 90) எனப் பொருள்படும்.

இவ்வாறாக, எழுதும் வரி வடிவத்தில் பெரிய எண்ணுக்கு முன் சிறிய எண்ணைப் போட்டு எழுதிக் கழித்துக் குறைப்பது ஒருபுறமிருக்க, பேசும் பேச்சொலி வடிவத்திலும் பெரிய எண்ணுக்கு முன் சிறிய எண்ணைக் கூறிக் கழித்துக் குறைக்கும் முறை இலத்தீனில் உள்ளது. 18, 19–28, 29–38, 39 என்பன போல 8, 9 என்னும் எண்களில் முடியும் கூட்டெண்களைக் குறிக்கும் பெயர்களில் இம்முறையைக் காணலாம். எடுத்துக்காட்டு:

'Viginti' என்றால் 'இருபது' என்றும், 'un' என்றால் 'ஒன்று' என்றும், 'de' என்றால் 'அதிலிருந்து நீங்குவது' (from) என்றும் பொருளாம். எனவே, un + de + viginti = undeviginti என்றால் இருபதிலிருந்து ஒன்று நீங்கியது — அதாவது, பத்தொன்பது (20 — 1 = 19) என்று பொருளாம்.

இதுபோலவே, duo + de + viginti = duodeviginti என்ருல், இருபதிலிருந்து இரண்டு நீங்கியது—அதாவது, பதினெட்டு (20—2=18) என்று பொருளாம். duo என்ருல் இரண்டு. பதினெட்டு என்பதை 'XVIII' எனவும், பத்தொன்பது என்பதை 'XIX' எனவும் இலத்தீனில் எழுதினுலும், இவ்விரண்டு எண்களும் முறையே, இரண்டு குறைந்த இருபது (duodeviginti), ஒன்று குறைந்த இருபது (undeviginti) என்றே வாயால் சொல்லப்படுகின்றன. இருபத்தெட்டு, இருபத்தொன்பது—முப்பத்தெட்டு, முப்பத்தொன்பது முதலியனவும் இவ்வாறே பெயர் சொல்லப்படுகின்றன.

இலத்தீனில் உள்ள இந்த எண் அமைப்பை நோக்குங்கால், தமிழிலும் இப்படியோர் அமைப்பு இருப்பதாக நினைவில் அரும்புகிறது. தமிழிலுள்ள 'ஒன்பது,' 'தொண்ணூறு', 'தொள்ளாயிரம்' என்னும் எண்ணுப் பெயர்களை இவண் ஆராய வேண்டும்.

ஒன்பது + பத்து = தொண்ணூறு என—அதாவது, 'ஒன்பது' என்னும் சொல்லும் 'பத்து' என்னும் சொல்லும் சேர்ந்து 'தொண்ணூறு' என்னும் சொல்லாக ஆனதாகவும், அடுத்து, ஒன்பது + நூறு=தொள்ளாயிரம் என—அதாவது 'ஒன்பது' என்னும் சொல்லும் 'நூறு' என்னும் சொல்லும் சேர்ந்து 'தொள்ளாயிரம்' என்னும் சொல்லாக ஆனதாகவும், தலைசிறந்த தமிழிலக்கண நூற்களாகிய தொல்காப்பியமும் நன்னூலும்

கூறுகின்றன. இந்தக் கருத்து பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. 'ஒன்பது+பத்து' என்னும் சொற்புணர்ச்சியில், 'ஒன்பது' என்பது 'தொண்' என்றும் 'பத்து' என்பது 'நூறு' என்றும் மாறித் 'தொண்ணூறு' என்னும் சொல் உருவானதாகவும், 'ஒன்பது + நூறு' என்னும் சொற் புணர்ச்சியில், 'ஒன்பது' என்பது 'தொள்' என்றும் 'நூறு' என்பது 'ஆயிரம்' என்றும் மாறித் 'தொள்ளாயிரம்' என்னும் சொல் உருவானதாகவும் கூறுவதை எவ்வாறு ஒத்துக்கொள்ள முடியும்? இந்தப் பொருந்தாக் கூற்றை,

1 "ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி யாய்த பகரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகாரம் ஆகும்."

2 "ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊஆ வாகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்".

என்னும் தொல்காப்பிய நூற்பாக்களாலும்,

1 தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - குற்றியலுகரப் புணரியல் - 40
2 ,, ,, ,, 58

1 " ஒன்பானொடு பத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப் பஃதகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே".

என்னும் நன்னூல் நூற்பாவாலும் அறியலாம். தலைமைத் தமிழிலக்கணப் பேராசிரியர்கள் இருவரும் எழுதியிருக்கிறார்கள் என்பதற்காக, இவர்தம் கருத்தை இன்றைய ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளவியலுமா? இந்தக் கருத்தைத் தேவநேயப் பாவாணரும் 'ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்' என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு எழுதியுள்ள குறிப்புரையில் பின்வருமாறு மறுத்துள்ளார் :-

2 " இந்நூற்பா ஒன்பது+பஃது=தொண்ணூறு என முடிக்கிறது. இம்முடிபு எவ்வகையிலும் பொருந்தாத தொன்றும். ஒன்பது என்னும் எண்ணுக்குப் பழம் பெயர் தொண்டு என்பது. 'தொண்டு தலையிட்ட' (தொல். 1358) என்று ஆசிரியரும், 'தொண்டுபடு திவவு' (மலைபடு. 21) என்று பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனாரும் கூறுதல் காண்க. தொண்டு என்னும் சொல் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கற்றுப் போய்விட்டது. அவர் காலத்திற்குமுன் தொண்டு தொண்பது தொண்ணூறு தொள்ளாயிரம் என்பன முறையே 9, 90, 900, 9000 என்னும் எண்களைக் குறிக்கும்

---

1 நன்னூல்—எழுத்ததிகாரம்—உயிரீற்றுப் புணரியல்—44.

2 தொல்காப்பியம் — எழுத்ததிகாரம—நச்சினார்க்கினியம் — கழகப் பதிப்பு—பாவாணரின் அடிக் குறிப்பு—குற்றியலுகரப் புணரியல்—40.

பெயர்களாயிருந்தன. 'தொண்டு' என்னும் ஒன்றும் இடப்பெயர் வழக்கறவே, தொண்பது என்னும் பத்தாமிடப் பெயர் ஒன்றுமிடத்திற்கும், தொண்ணூறு என்னும் நூறுமிடப் பெயர் பத்தாமிடத்திற்கும், தொள்ளாயிரம் என்னும் ஆயிரத்தாமிடப் பெயர் நூறுமிடத்திற்குமாக வழங்கத் தலைப்பட்டன. தொண்பது என்னும் பெயர் முறையே தொன்பது ஒன்பது என மருவிற்று. ஆயிரத்தாமிடப் பெயர் நூறுமிடத்திற்கு வழங்கவே 9000 என்னும் எண்ணைக் குறிக்க ஒன்பது என்னும் பெயருடன் ஆயிரம் என்னும் பெயரைச் சேர்க்க வேண்டியதாயிற்று. முதல் பத்து எண்ணுப் பெயர்களில் ஒன்பது என்பதைத் தவிர, மற்றவையெல்லாம் ஒரு சொல்லாயிருப்பதையும், ஒன்பது என்பது இரு சொல்லாய்ப் பது (பத்து) என்று முடிவதையும் தொண்ணூறு என்பது நூறு என்றும் தொள்ளாயிரம் என்பது ஆயிரம் என்றும் முடிவதையும், நோக்குக. தொண்பது என்பதின் திரிபான ஒன்பது என்னும் சொல்லுக்குப் பொருந்தப் புகலும் முறை பற்றி ஒன்று குறைந்த பத்து என்று பொருள் கூறுவர் சிலர். அதுவே அதன் பொருளாயின் தொண்ணூறு தொள்ளாயிரம் என்பவற்றிற்கும் அப்பொருள் ஏற்கவேண்டும். அங்ஙனம் ஏலாமையின் அது போலியுரையென மறுக்க. ஆகவே தொண்டு + பத்து = தொண்பது, தொண்டு + நூறு = தொண்ணூறு, தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம் என்று புணர்ப்பதே முறையென்றும், தொண்டு என்னும் எண்ணுப் பெயர் வழக்கற்றதினால் அதன் மேலிடப் பெயர்கள் மூன்றும் ஒவ்வோரிடமாய்த் தாழ்ந்து வந்து வழங்கின என்றும் அறிந்து கொள்க".

ஒன்பது + பத்து என்னும் சொற்கள் புணர்ந்து தொண்ணூறு எனவும், ஒன்பது + நூறு என்னும் சொற்கள் புணர்ந்து தொள்ளாயிரம் எனவும் ஆயின எனத் தொல்காப்பியரும் நன்னூலாரும் கூறியிருப்பதைத் தேவநேயப் பாவாணர் மறுத்திருப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதே. ஆயினும், 'தொண்டு' என்னும் சொல் 9–ஐயும், 'தொண்பது' என்பது 90-ஐயும், 'தொண்ணூறு' என்பது 900-ஐயும், 'தொள்ளாயிரம்' என்பது 9000–ஐயும் முன்பு குறித்தன; இவற்றுள் 'தொண்டு' என்னும் சொல் வழக்கற்றுப் போய் விட்டதால், மற்றவை ஒவ்வொரு படி கீழிறங்கி விட்டன; அதாவது, 9000–ஐக் குறித்த தொள்ளாயிரம் என்னும் சொல் 900-ஐயும், 900-ஐக் குறித்த தொண்ணூறு என்னும் சொல் 90–ஐயும், 90-ஐக் குறித்த தொண்பது என்னும் சொல் தொன்பது – ஒன்பது எனத் திரிந்து 9-ஐயும் குறிக்கலாயின – என்று பாவாணர் கூறும் கருத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை. தொண்டு + ஆயிரம் = தொண்ணாயிரம் என்றல்லவா ஆகவேண்டும்? தொண்டு என்னும் சொல் வழக்கற்றுப் போனால், தொண்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் சொற்கள் அப்படியே இல்லாமல் ஒவ்வொரு படி ஏன் குறைந்து வரவேண்டும்? இஃது இயற்கைக்குப் பொருத்தமாகத் தெரியவில்லையே! மேலும், தொண்பது என்னும் சொல் ஒன்பது என மருவியதாகக் கூறுவதும் பொருந்துவதாயில்லை. அங்ஙனமெனில், ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் சொற்கள் பற்றிய உண்மையான தீர்வுதான் யாது? அதனை இங்கே நாம் கண்டுபிடித்தாக வேண்டும்.

'தொண்பது என்பதின் திரிபான ஒன்பது என்னும் சொல்லுக்குப் பொருந்தப் புகலும் முறைபற்றி ஒன்று குறைந்த பத்து என்று பொருள் கூறுவர் சிலர். அதுவே அதன் பொருளாயின் தொண்ணூறு தொள்ளாயிரம் என்பவற்றிற்கும் அப்பொருள் ஏற்கவேண்டும். அங்ஙனம் ஏலாமையின் அது போலியுரையென மறுக்க'-என்று பாவாணர் கூறியிருப்பது பொருந்தாது. 'ஒன்பது' என்னும் சொல்லுக்கு 'ஒன்று குறைந்த பத்து' என்று பொருள் கூறுவதே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

இலத்தீனில் V-க்கு (ஐந்திற்கு) முன்னால் I (ஒன்று) போட்டால் IV (4) என, அதாவது நான்கு என்றும், X-க்கு (பத்துக்கு) முன்னால் I (ஒன்று) போட்டால் IX(9) என, அதாவது ஒன்பது என்றும் பொருள்படுவதையும், பத்தொன்பது என்பது ஒன்று குறைந்த இருபது (undeviginti) எனவும் பதினெட்டு என்பது இரண்டு குறைந்த இருபது (duodeviginti) எனவும் சொல்லப்படுவதையும் ஈண்டு ஒப்பிட்டு நோக்கவேண்டும். இலத்தீனில் அப்படியிருப்பதனால் தமிழிலும் ஒன்பது என்பது ஒன்று குறைந்த பத்து என்றே பொருள்படும் என்று கூறவேண்டிய கட்டாயம் இல்லையெனினும், 'ஒன்று குறைந்த எண்' எனக் கூறும் மரபு, உலக மக்களிடையே உண்டு என்பதைச் சுட்டி நிலைவுறுத்தவே இங்கே இலத்தீன் எண்ணுப் பெயர்கள் எடுத்துக் காட்டப்பட்டன. இந்தப் பாதையைப் பின்பற்றினால், ஒன்பது என்னும் சொல்லுக்குப் போலவே தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும்

சொற்கட்கும் தீர்வு காண முடியும். முதலில் ஒன்பது என்பதை எடுத்துக்கொள்வாம் :

பொதுவாகக் கணக்கியலை எடுத்துக்கொள்ளின் ஒன்று முதல் பத்துவரையுமே அடிப்படை எண்கள்—அவற்றாலாய பெருக்கமே மற்றைய எண்கள்—என்பதை அனைவரும் அறிவர். தமிழில் ஒன்று முதல் பத்து வரையுமுள்ள எண்ணுப் பெயர்களுள் 'ஒன்பது' என்னும் எண்ணுப் பெயர் தவிர மற்றைய யாவும் ஒரே சொல்லா யுள்ளன. ஒன்பது என்னும் பெயர் ஒன்(று) + ப(த்)து = ஒன்பது என இரு சொற்கள் புணர்ந்து உண்டானதற்குரிய அறிகுறி தென்படுகிறது. ஒன்று+பத்து என்பன சேர்ந்து ஒன்பது என்னும் பெயர் உண்டாயிற்றென்றால், இரண்டு+பத்து=இருபது ($10\times2=20$), மூன்று+பத்து = முப்பது ($10\times3 = 30$), எட்டு+பத்து = எண்பது ($10\times8=80$) என்பனபோல, ஒன்று+பத்து என்னும் சொற்கள் புணர்ந்து ($10\times1=10$) ஒரு பத்தைத்தானே அதாவது பத்து என்னும் எண்ணைத்தானே குறிக்க வேண்டும்? மாறாக ஒன்பது (9) என்னும் எண்ணை எவ்வாறு குறிக்க முடியும்? என்ற வினா எழும். இரண்டு பத்துக்களைக் குறிக்க 'இருபது' என்னும் பெயரும் ஆறு பத்துக்களைக் குறிக்க 'அறுபது' என்னும் பெயரும் இருப்பதுபோல ஒரு பத்தைக் குறிக்க நூல் வழக்கிலும் பேச்சு வழக்கிலும் 'ஒருபது' என்னும் பெயர் வழக்காறு தனியே இருப்பதால், ஒன்பது என்னும் பெயர் ஒரு பத்தைக் (10) குறிக்காமல் 9 என்னும் எண்ணையே குறிக்கும். அங்ஙனமெனில், 'ஒன்று + பத்து = ஒன்பது' என்னும்

புணர்ச்சியைப் பெருக்கல் கணக்காக எடுத்துக் கொள்ளாமல், கழித்தல் கணக்காக எடுத்துக் கொள்ள வேண்டும்; அதாவது, $10 \times 1 = 10$ எனக் கொள்ளாமல், $10 - 1 = 9$ எனக் கொள்ள வேண்டும்.

எனினும் இரண்டு+பத்து=இருபது (20), மூன்று+பத்து=முப்பது (30) எனப் பெருக்கலாகப் புணர்வதுபோல், ஒன்று+பத்து என்பதும் ஒருபது (10) எனப் பெருக்கலாகப் புணர்வதே இயற்கை; ஒன்பது (9) எனக் கழித்தலாகப் புணர்வது இயற்கைக்கு முரண் என ஒரேயடியாக அடித்துப் பேசிவிடலாம். மற்றும், ஒன்பது என்பதை இரண்டு சொற்களின் புணர்ச்சியாகக் கொள்ளாமல், ஒன்று, இரண்டு முதலியன போல ஒரே சொல்லாகவே கொள்ளலாம் என்றும் சிலர் கூறிவிடலாம். அங்ஙன மெனில், இதற்குரிய தீர்வு யாது?

இருபது, முப்பது முதலிய பெயர்களின் இறுதி யில் உள்ள 'பது' என்பதைப் 'பத்து' என்னும் சொல்லின் திரிபாகக் கொள்வது போலவே, ஒன்பது என்னும் பெயரின் இறுதியில் உள்ள 'பது' என் பதையும் 'பத்து' என்னும் சொல்லின் திரிபாகக் கொள்வதே பொருத்த முடைத்து. எனவே, ஒன்பது என்பதின் இறுதியிலுள்ள 'பது' என்பது 'பத்து' என்பதின் திரிபு எனக் கொள்ளும்போது, அதற்கு முன்னுள்ள 'ஒன்' என்பது 'ஒன்று' என்னும் சொல்லின் திரிபு எனக் கொள்ளுதலும் பொருத்த

முடையதுதானே? ஆகவே, ஒன்பது என்னும் பெயர் ஒரே சொல் அன்று; ஒன்று+பத்து என்னும் இரண்டு சொற்களின் புணர்ச்சியே யாகும் என்பது போதரும். இனி, ஒன்று+பத்து என்பது பெருக்கலாகக் கொள்ளப்படாமல் ஒன்பது (10 — 1 = 9) எனக் கழித்தலாகக் கொள்ளப்பட்ட வரலாற்றை ஆய்வாம்:

தொன்று தொட்டே ஒன்பது என்னும் எண்ணைக் குறிக்கத் 'தொண்டு' என்னும் சொல் வழக்காற்றில் இருந்து வந்தது. இதனை,

1 'தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற்று'.
2 'தொடித் திரிவன்ன தொண்டு படு திவவின்'.
3 'ஆறென ஏழென எட்டெனத் தொண்டென'.
4 'தொண்டிருந் துன்பம் தொடரும்'.
5 'தொண்டு படு திவவின் முண்டக நல்யாழ்'.

முதலிய ஆன்றோர் ஆட்சிகளால் அறியலாம். எனவே, பண்டை நாளில் ஒன்று, இரண்டு, மூன்று நான்கு, ஐந்து, ஆறு ஏழு, எட்டு, தொண்டு, பத்து என ஒன்று முதல் பத்து வரையுமான எல்லா எண்ணுப் பெயர்களுமே ஒரே சொல்லா யிருந்தமை புலனாகும். இவற்றுள் 'தொண்டு' என்னும் பெயரை மக்கள் நாளடைவில் மறந்து அதன் இடத்தில் ஒன்பது என்னும் பெயரை உறுதிப்படுத்தி விட்டனர் இதற்குப் பொருத்தமான பொருட்டு (காரணம்) உண்டு:

1 தொல்காப்பியம்—பொருளதிகாரம்—செய்யுளியல் பேராசிரியம் – 101.
2 மலைபடு கடாம்—வரி 21 3 பரிபாடல் : 3—79.
4 ஏலாதி — 72. 5 ஆசிரிய மாலை.

ஒன்று முதல் பத்து வரையுமான எண்ணுப் பெயர்களுள் ஒன்று, ஆறு, எட்டு, தொண்டு என்னும் நான்கு மட்டும் பல பொருள் தருபவை. அதாவது, ஒன்று என்னும் சொல் 1 என்னும் எண்ணுப்பொருளைத் தருவதல்லாமல், ஒன்றுதல் — பொருந்துதல் என்னும் பொருளையும் தருகிறது. ஆறு என்னும் சொல் 6 என்னும் எண்ணுப் பொருளைத் தருவதன்றி, ஓடும் ஆறு (நதி), வழி, ஆறுதல் முதலிய பொருள்களையும் தருகிறது. எட்டு என்னும் சொல் 8 என்னும் எண்ணுப் பொருளைத் தருவதன்றி, எட்டுதல் என்னும் பொருளையும் தருகிறது. தொண்டு என்னும் சொல் 9 என்னும் எண்ணுப் பொருளைத் தருவதன்றி, பணி, பணி விடை, அடிமைத்தன்மை, அடிமையாள், கடவுள் வழிபாடு, மாட்டுத் தொழுவம், தேங்காய் — பலா முதலியவற்றின் மேல் பகுதி, ஒருவகைப் பூண்டு, பழமை, முதுமை, ஒடுக்கவழி, மாட்டின் கழுத்துக் கட்டை, ஒழுக்கம் கெட்டவன் - அல்லது-கெட்டவள் முதலிய பல்வேறு பொருள்களையும் தருகிறது. இவ்வாறாகத் தொண்டு என்னும் சொல் பல பொருள்கட்கு இடந்தந்து குழப்பம் விளைவிப்பதாலும், 'ஒழுக்கம் கெட்டவர்' என்ற இழிந்த பொருளும் உடைத்தாயிருப்பதாலும் பையப் பைய மக்கள் ஆட்சியிலிருந்து நழுவிவிட, அதனிடத்தை ஒன்பது என்னும் சொல் உறுதியாகப் பற்றிக் கொண்டது ஒன்று, ஆறு, எட்டு என்னும் சொற்களும் வேறு பொருள்கள் உடையன எனினும், அவை தொண்டு என்னும் சொல் அளவிற்குக் குழப்பமும் இழிபொருளும் கொண்டிருக்கவில்லை

யாதலின் ஆட்சியில் அப்படியே உள்ளன. மற்றும், தொண்டு என்பதற்குப் பதில் வேறு சொல் உருவாவதற்கு ஏற்ற வாய்ப்பும் இருந்தது. அதாவது:-

ஒன்று முதல் பத்து வரையுமே அடிப்படை எண்கள் – அவற்றைக் கொண்டே ஏனைய எண்ணுப் பெயர்கள் உருவாக்கப்பட்டன – என்னும் உண்மையை ஈண்டு மீண்டும் நினைவு கூரவேண்டும். பத்து என்பதன் பின்னால் ஒன்று போட்டுக் கூட்டிப் (பத்து+ஒன்று=) பதினொன்று என்று சொல்லத் தெரிந்த மக்கள், பத்து என்பதன் முன்னால் ஒன்று போட்டுக்கழித்து (ஒன் [று]ப[த்]து) ஒன்பது எனக் கூறவும் அறிந்திருந்ததில் வியப்பேது மில்லை; இஃது இயற்கையு மாகும்.

அடிப்படை எண்களுள் பத்தே பெரிய எண்-தலைமை எண் – முழுமை எண் ஆகும். ஒன்பது ரூபாய் கொடுத்தால் 'முழுசா கொடுத்து விடுங்களேன்' — 'சரியாய்க் கொடுத்து விடுங்களேன்' — அதாவது, பத்து ரூபாயாகக் கொடுத்து விடுங்களேன் — என்று கூறும் வழக்கம் உலகியலில் உண்டு மூன்று பொருள்கள்-ஐந்து பொருள்கள் - ஏழு பொருள்கள் என்றெல்லாம் பேசும் மக்கள், ஒன்பது பொருள்களைக் குறிப்பிட வேண்டுமானால், ஒன்பது பொருள்கள் எனக் கூறுவதல்லாமல், 'முழுசுக்கு ஒன்று குறைவு' அல்லது 'பத்துக்கு ஒன்று குறைவு' என்று சொல்லும் சுவையான வழக்காறும் உலகியலில் உண்டு 'பத்துக்கு ஒன்று குறைவு' என்னும் வழக்காறே 'ஒன்று குறைந்த பத்து' என மாற்றியும்

சொல்லப்பட்டு மேலும் சுவையளிக்கிறது. இவ்வாறெல்லாம் சொற்களை—சொற்றொடர்களைச் சுவை பெறச் சொல்லியாள்வது ஒருவகை மக்கள் மரபு. ஒரு பெரிய எண்ணிலிருந்து ஒன்று குறைந்தால் 'ஒன்று குறைந்த இத்தனை' என்று கூறும் மரபு புலவர்களிடையேயும் உண்டு. நன்னூலாசிரியர் பவணந்தியார் சார்பெழுத்தின் விரியைச் சொல்ல வந்தவிடத்தில், மொத்தம் 'முந்நூற் றறுபத் தொன்பது' (369) என்று கூற வேண்டியவர் அங்ஙனம் கூறாமல், 'ஒன்று குறைந்த முந்நூற் றெழுபது' (370—1 = 369) என்று கூறியுள்ளார். இதனை நன்னூலி லுள்ள

* ''உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறே ழஃகு மிம்முப் பானேழ்
உகர மாறா றைகான் மூன்றே
ஔகா னொன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப''.

என்னும் நூற்பாவின் இறுதி யடியா லறியலாம். 'ஒன்று ஒழி முந்நூற்று எழுபான்' என்றால், 'ஒன்று குறைந்த முந்நூற்று எழுபது' அதாவது 'முந் நூற்று அறுபத்தொன்பது' என்பது பொருள். இது போலவே, ஒன்பது என்னும் எண்ணை, ஒன்று குறைந்த பத்து என்னும் பொருளில், 'ஒன்று ஊன மான பத்து'—'ஒன்று ஊனப் பத்து' என்றெல்லாம்

* நன்னூல்—எழுத்ததிகாரம் – எழுத்தியல்—6

அந்தக் காலத்தில் மக்கள் குறிப்பிட்டு வந்துள்ளனர். ஊனம் என்றால் குறைவு; ஒன்று ஊனப் பத்து அல்லது ஊனமான பத்து என்றால், ஒன்று குறைந்த பத்து அதாவது ஒன்பது (9) என்று பொருளாம். இந்த வழக்காறு அன்று இருந்தது என்னும் உண்மையை, '* ஒன்பானொடு பத்து நூறு மொன்றின்' என்னும் நன்னூல் நூற்பாவிற்கு உரையாசிரியர் மயிலைநாதர் எழுதியுள்ள உரைப் பகுதியால் அறியலாம். அவ்வுரை, உ. வே. சாமிநாதையர் பதிப்பிலுள்ளாங்கு அப்படியே வருமாறு:

'ஒன்பானொடு பத்து.................................இரிப்பது நெறியே'

எ—ன், தொண்ணூறும் தொள்ளாயிரமும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்) ஒன்பதென்னும் [1] எண் முன்னர்ப் பத்தும் நூறுமான எண்கள் வரின், நிலைமொழியான [2] ஒன்றானப் பத்தானே வருமொழிகளிரண்டையு மாறி அதன் பின் அதன் ஒகாரத்துடனே ஒரு தகர வொற்றைச் சேர்த்துப் பஃதென் பதனை யொழித்து முறையே [3] ணகரமும் ளகரமுமாக னகர வொற்றைத் திரிப்பது முறைமை எ—று.

ஒன்றானமான பத்து — ஒன்பது; அஃது அக் காலச் சொல்.

வ—று. தொண்ணூறு, தொள்ளாயிரம் என வரும்.

* நன்னூல்—எழுத்ததிகாரம்—உயிரீற்றுப் புணரியல்-44, உ. வே. சாமிநாதையர் பதிப்பு.

எட்டாற் பெருக்கின பத்து எண்பதாஞற் போலவே ஒன்றானப் பத்தாற் பெருக்கின பத்தும் நூறும் தொண்ணூறும் தொள்ளாயிரமுமா மென்க. 'நெறி' என்றதஞன் ஒற்று 'இரட்டாது தொளாயிர மென்பதும் கொள்க.

(பி—ம்) [1]எண்ணின் [2]ஒன்றானமான பத்தானே பத்தும் நூறுமான மொழிகள் [3]ணகார ளகாரமாக [4]இரட்டியாது.

———o———

மேலே, நன்னூல் நூற்பாவுக்கு ஏற்ப மயிலை நாதர் உரை யெழுதியுள்ளார். ஆஞல் நன்னூலில் கூறப்பட்டுள்ள புணர்ச்சி முறை பொருந்தாது எனபதை நாம் முன்னரே கண்டுள்ளோம். எனவே, நூற்பாவைப் பற்றியும் அதன் உரையைப் பற்றியும் இப்போது இங்கே கவலையில்லை. மயிலைநாதர் உரையின் இடையிடையே காணப்படும் 'ஒன்றானப் பத்து', 'ஒன்றானமான பத்து' என்னும் தொடர்களே இங்கே நாம் எடுத்துக்கொண்டு ஆராய வேண்டியவை. இங்கே,

> "ஒன்றானமான பத்து—ஒன்பது;
> அஃது அக்காலச் சொல்",

என்று மயிலைநாதர் கூறியுள்ள விளக்கம் மிகவும் ஊன்றி நோக்கற்பாலது. ஒன்பது என்னும் எண் ஒன்றானமான பத்து என அழைக்கப்பட்டதாகவும் அஃது அக்காலச் சொல் என்பதாகவும் மயிலைநாதர் கூறியிருப்பதை மறப்பதற்கில்லை. ஒன்றானமான பத்து என்பது ஒன்றானப் பத்து என இன்னும் சுருங்க வழங்கப்பட்டதாகவும் அவரது உரையால்

தெரிகிறது. அதாவது, ஒன்றொழி பத்து — ஒன்று குறை பத்து — என்பது அதன் பொருள். ஒன்று குறை பத்தின் சுருக்கமே 'ஒன்பது' என்பதாகும்.

இலத்தீனில் பத்தொன்பது (19) என்பது 'ஒன்று குறைந்த இருபது' — undeviginti — என அழைக்கப்படுதல் போல, தமிழில் ஒன்பது (9) என்பது 'ஒன்று குறைந்த பத்து' என்னும் பொருளில் அழைக்கப்படுதல் ஈண்டு ஒப்புநோக்கி மகிழற்பாலது. இதே பாதையில் சென்றால் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் எண்ணுப் பெயர்கட்கும் தீர்வு காணலாம்.

ஒன்பது + பத்து என்னும் இரு சொற்களும் இணைந்து 'தொண்ணூறு' என்று ஆகியிருப்பதாகவும், ஒன்பது + நூறு என்னும் இரு சொற்களும் இணைந்து 'தொள்ளாயிரம்' என்றாகியிருப்பதாகவும் தொல்காப்பியரும் நன்னூலாரும் கூறியிருப்பதை நாம் முன்னரே மறுத்துள்ளோம். அது போலவே, முதலில் 9000 என்னும் எண்ணைக் குறித்து வந்த 'தொள்ளாயிரம்' என்னும் பெயர் பின்னர் 900 என்னும் எண்ணையும், 900 என்னும் எண்ணைக் குறித்து வந்த 'தொண்ணூறு' என்னும் பெயர் பின்னர் 90 என்னும் எண்ணையும் ஒவ்வொரு படியிறங்கிக் குறிக்கத் தொடங்கிவிட்டன என்று தேவநேயப் பாவாணர் கூறியிருப்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றிற்கு உரிய புணர்ச்சி விதியை இங்கே நாம் கண்டாக வேண்டும். இது மிக மிக எளிய புணர்ச்சி விதி; அதோடு இயற்கை

யான புணர்ச்சி விதியாகும். இது தெரியாமல் இலக்கண ஆசிரியர்கள் எவ்வளவோ இடர்ப்பாடுற்று எதையாவது சொல்லி வைக்கவேண்டுமே யென்று என்னென்னவோ கூறிச் சென்றுள்ளனர். இனி, எளிய — இயற்கையான — உண்மையான — தெளிவான அந்தப் புணர்ச்சி விதி வருமாறு :-

தொள் + நூறு = தொண்ணூறு.
தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம்.

இதனினும் இயற்கையான — உண்மையான புணர்ச்சி விதி எதுவும் இருக்க முடியாது. மொழி நூல் அறிவு மிக்க எவரும் இந்தப் புணர்ச்சி விதி பொருந்தாதென்று புறக்கணிக்கவே முடியாது. புணர்ச்சி விதி சரிதான் — ஆனால் பொருள் என்ன? தொள் நூறு என்றால் 'குறைவு பெற்ற நூறு'; தொள் ஆயிரம் என்றால் 'குறைவு பெற்ற ஆயிரம்'. தொள் என்றால், தொளைத்து எடுக்கப்பட்டது — குறைக்கப்பட்டது என்று பொருளாம். 10 என்பது, பத்து ஒன்று கொண்டது; அதில் ஒரு பகுதி குறைந்தால் ஒன்பது (10 − 1 = 9) ஆகும். நூறு (100) என்பது, பத்துப் பத்து கொண்டது; அதில் ஒரு பகுதி குறைந்தால் (தொள் + நூறு) தொண்ணூறு (100—10 = 90) ஆகும். ஆயிரம் (1000) என்பது, பத்து நூறு கொண்டது; அதில் ஒரு பகுதி குறைந்தால் (தொள் + ஆயிரம்) தொள்ளாயிரம் (1000 − 100 = 900) ஆகும். ஒரு பெரிய முழு எண்ணிற்குச் சிறிது குறைவதைத் தனிப் பெயராகச் சொல்லாமல் அந்த முழு எண்ணின் பெயரைக் கொண்டே குறிப்பிடுவது

மக்கள் இயல்பு என்பதை ஈண்டு மீண்டும் நினைவு கூர வேண்டும். IX (10—1)=9, XC (100—10)=90 என இலத்தீனில் இம்முறை உள்ளதாக முன்பு கூறியிருப்பவற்றையெல்லாம் இங்கே மறுபடியும் நினைவுசெய்து பார்க்கவேண்டும்.

இரண்டு பத்துக்களை இருபது என்றும் ஏழு பத்துக்களை எழுபது என்றும் கூறும் மக்கள், ஒன்பது பத்து என்பது நூறை நெருங்கிவிட்டதால், குறைந்த நூறு என்னும் பொருளில் அதனைத் தொண்ணூறு (தொள்+நூறு) எனக் கூறுவது ஒருவகைச் சுவையான வழக்காறுகும். இது போலவே, மூன்று நூறுகளை முந்நூறு எனவும் எட்டு நூறுகளை எண்ணூறு எனவும் கூறும் மக்கள், ஒன்பது நூறு என்பது ஆயிரத்தை நெருங்கி விட்டதால், குறைந்த ஆயிரம் என்னும் பொருளில் அதனைத் தொள்ளாயிரம் (தொள்+ஆயிரம்) எனக் கூறுவதும் சுவையான வழக்காறேயாகும். ஈண்டு, ஒன்பது என்பது, ஒன்று குறைந்த பத்து என்னும் பொருளில் 'ஒன்றானமான பத்து', 'ஒன்றானப் பத்து' என்றெல்லாம் வழங்கப்பட்டதாக மயிலைநாதர் தெரிவித்திருப்பதை மீண்டும் நினைவு கூரவேண்டும். தொல்காப்பியர், 690 என்பதை 'பத்துக் குறை எழுநூறு' (செய்யுளியல்—101) என்று கூறியிருப்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது.

அடுத்து, 'தொள்' என்பதற்கு, தொளைக்கப்பட்டது — துளைக்கப்பட்டது — குறைக்கப்

பட்டது — குறைவுபட்டது — என்ற பொருளுண்மைக்குப் பல சான்றுகள் தரமுடியும். தொள்ளுதல் என்றால் தோண்டுதல் — துளைத்தல்; தொள்ளல்—தொளை — தொள்ளை என்றால் துளை; தொள்ளை என்றால் துளைக்கப்பட்டது - குறைக்கப் பட்டது - எடுத்துக்காட்டு: தொள்ளைக்காது. [1] 'தொள்ளைப் புலால் பை' என அருணகிரிநாதரும் கூறியுள்ளார். தொள்ளை என்பதற்குக் 'குறை' என்னும் பொருளும் உள்ளதை, [2] 'தொள்ளை யுணர்வின்னவர்கள் சொல்லின் மடிகிற்பின்' என்னும் சீவக சிந்தாமணிப் பாடற் பகுதியால் அறியலாம். கம்ப இராமாயணத்தில்,

[3] 'தொளை கொடாழ் தடக்கை'

[4] 'மணித் தோளையுந் தொளைத்தான்'

என்பன காண்க.

[5] 'தொள்ளை வான்பூ'—அகநானூறு.

[6] 'தொள்ளை மன்றத்து'—புறநானூறு.

'தொள்' என்பதும் அதன் பொருளும் நினைவிற்கு வராமையானும், குறைந்த பத்து — குறைந்த நூறு — குறைந்த ஆயிரம் எனக் குறிப்பிடுவதில் மக்கள் ஒருவகைச் சுவை காண்கின்றனர் என்னும் உண்மை புலப்படாமையானும், பழைய இலக்கண ஆசிரியர்கள் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றிற்கு என்னென்னவோ புணர்ச்சி விதிகள் கூறி இடர்ப்பட்டனர். அவற்றின் உண்மை

1. திருப்புகழ்—289.
2. சீவகசிந்தாமணி — காந்தருவதத்தையார் இலம்பகம் — 4.
3. கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம்—சித்திரகூடப்படலம்—29.
4. கம்பராமாயணம்—யுத்த காண்டம்—நிகும்பலையாகப் படலம்—123.
5. அகநானூறு—149, 275.
6. புறநானூறு—333.

யான — பொருத்தமான புணர்ச்சி விதி இப்போது புலனாகும். இங்கே, இலத்தீன் எண் – எண்ணுப் பெயர் அமைப்பு முறையும் நமக்குத் துணைபுரிகிறது.

உண்மை யிங்ஙன மிருக்க, இப்போது புதிய ஆராய்ச்சியாளர் சிலர் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றிற்கு வேறுவகைப் பெயர்க்காரணம் கூறுகின்றனர். பெருவியப்பிற்குரிய – அதே நேரத்தில் - பொருந்தாத அந்தப் பொய்க் காரணம் வருமாறு :-

“பண்டைநாளில் அடிப்படை எண்கள் பத்து இருக்கவில்லை; இப்போதுள்ள ஒன்பது நீங்கலாக மொத்தம் ஒன்பது (9) எண்களே அப்போது இருந்தன. அதாவது,

| | |
|---|---|
| 1—ஒன்று | 6—ஆறு |
| 2—இரண்டு | 7—ஏழு |
| 3—மூன்று | 8—எட்டு |
| 4—நான்கு | 10—பத்து |
| 5—ஐந்து | |

இவையே முன்பு நடைமுறையில் இருந்த எண்களாகும். இப்போதுள்ள ஒன்பது (9) என்னும் எண்ணின் இடத்தில் அப்போது பத்து இருந்தது. இப்போது அடிப்படை எண்கள் பத்து இருப்பதால் பத்தைப் பத்தால் பெருக்கிப் ‘பத்துப்பத்து நூறு’ ($10 \times 10 = 100$) என்கிறோம். அப்போது அடிப்படை எண்கள் ஒன்பதே இருந்ததால், ஒன்பதை ஒன்பதால் பெருக்கினால் வரும் எண்பத்தொன்றைத்தான் ($9 \times 9 = 81$) அப்போது ‘நூறு’ என்றார்கள்.

அப்போது ஒன்பதின் இடத்தில் பத்து இருந்ததால், அப்போதும் 'பத்துப் பத்து நூறு' ($10 \times 10 = 100$) என்றுதான் சொல்லப்பட்டது. ஆனால் அப்போது நூறு (100) பழங்கள் என்று சொல்லப்பட்டவற்றை எண்ணிப் பார்த்தால் ($9 \times 9 = 81$) எண்பத்தொரு பழங்களே இருக்கும். இதேபோல அப்போது ஆயிரம் பழங்கள் என்று சொல்லப்பட்டவற்றை எண்ணிப்பார்த்தால் ($81 \times 9 = 729$) எழுநூற்று இருபத்தொன்பது பழங்களே இருக்கும். ஆயினும் அப்போதும் 'பத்து நூறு ஆயிரம்'($100 \times 10 = 1000$) என்றே சொல்லப்பட்டது; அந்த 1000 என்பது இப்போதுள்ள 729 தான்.

இந்த நிலையில் புதிதாக ஒன்பது (9) என்னும் எண் முளைத்தது. அதையும் சேர்த்து 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 — எனப் பத்து எண்கள் கணக்கிடப் பட்டன. புதிய பத்தைப் பத்தால் பெருக்க இப்போதுள்ள நூறு கிடைத்தது; புதிய நூறைப் பத்தால் பெருக்க இப்போதுள்ள ஆயிரம் கிடைத்தது. இவ்வாறாக, அடிப்படை எண்ணில் புதிதாக ஒன்று கூடியதால், பழைய பத்தின் இடத்தையும் பழைய நூறின் இடத்தையும் பழைய ஆயிரத்தின் இடத்தையும் வேறு எண்கள் பிடித்துக்கொள்ள, புதிய பத்தும் புதிய நூறும் புதிய ஆயிரமும் தோன்றின. இந்நிலையில் புதிதாய் வந்தவற்றிற்குப் பெயர் கொடுக்க வேண்டுமே!

முன்னர் எட்டை யடுத்துப் பத்து இருந்தது; பின்னர் மேலும் ஓர் எண் முளைத்துவிட்டதால், எட்டை யடுத்திருந்த பத்து பின்னர்ப் பழைய பத்து

அதாவது 'தொல் பத்து' என அழைக்கப்பட்டது. அதேபோல அடுத்த கட்டத்தில் அதாவது பத்துக் கொண்ட அடுக்கு வரிசையில், முன்னர் எண்பதை யடுத்திருந்த நூறு பின்னர்ப் பழைய நூறு அதாவது 'தொல் நூறு' என வழங்கப்பட்டது. அதேபோல அடுத்த கட்டத்திலும் அதாவது நூறு கொண்ட அடுக்கு வரிசையிலும், முன்னர் எண்ணூறை அடுத்திருந்த ஆயிரம் பின்னர்ப் பழைய ஆயிரம் அதாவது 'தொல் ஆயிரம்' என அழைக்கப்பட்டது. இவற்றுள் தொல் பத்து என்பது தொன்பது – ஒன்பது எனவும், தொல் நூறு என்பது தொன்னூறு – தொண்ணூறு எனவும், தொல் ஆயிரம் என்பது தொல்லாயிரம் – தொள்ளாயிரம் - தொளாயிரம் எனவும் நாளடைவில் மாறின. ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றின் பெயர்க்காரணம் இதுதான்!''

இவ்வாறு புதிய ஆராய்ச்சியாளர் சிலர் புகலு கின்றனர். இவர்தம் கூற்று பொருந்தாது என எளிதில் மறுத்துவிடலாம். அதற்கு இரண்டு சான்றுகள் உள்ளன; வருமாறு:-

(1) தொல் பத்து என்பது தொன்பது என்று வேண்டுமானால் மாறமுடியுமே தவிர, ஒன்பது என்று மாறமுடியாது. தொல் (தொன்மை) நூறு தொன்னூறு எனவும், தொல் (தொன்மை) ஆயிரம் தொல்லாயிரம் எனவும் மாற முடியுமே தவிர, தொண்ணூறு என்றும் தொள்ளாயிரம் என்றும் மாற முடியாது.

(2) அவ்வாறே 'பழைய' என்னும் பொருளில் 'தொல்' என்பது சேர்ந்துதான் இப்பெயர்கள் திரிந்து உருவாயின என்று சிலர் வல்லடி வழக்குப் பேசினும், இதனை வேறொரு சான்று காட்டி மறுத்துவிடலாம். பண்டைக் காலத்தில் அடிப்படை எண்கள் பத்து இருக்கவில்லை – ஒன்பதுதாம் இருந்தன - அதாவது, இப்போது உள்ள ஒன்பது அப்போதிருக்கவில்லை – எட்டை அடுத்துப் பத்து தான் இருந்தது - என்று கூறுவதற்கு என்ன சான்று காட்ட முடியும்? இந்தக் கருத்து ஏற்புடையதாகாது; இயற்கைக்கு முரணானது. இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதானால், அந்தக் காலத்து மக்களுக்கு இரு கைகளிலும் சேர்த்துப் பத்து விரல்கள் இருக்க வில்லை - ஒன்பது விரல்களே இருந்தன—என்ற கருத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதை யார் ஏற்றுக்கொள்ள முடியும்? பண்டை நாளில் எண்ணிக்கைக்குக் கை விரல்களே பயன்படுத்தப்பட்டன - இந்த நாளிலும் பயன்படுத்தப்படுகின்றனவே! கை விரல்கள் பத்தாக இருந்ததனால்தான் - அவற்றின் துணை கொண்டு எண்ணப்பட்டதனால்தான் - அடிப்படை எண்கள் பத்தாக அமைந்தன. இந்தப் பேருண்மையை மறுக்கவோ — மறக்கவோ முடியாது. இங்ஙிலையில், அடிப்படை எண்கள் ஒன்பதுதான் என்று கூறும் ஆராய்ச்சி எங்ஙனம் பொருந்தும்? இதற்கு உருப்படியான சான்று என்ன கூறமுடியும்? எனவே, பழைய பத்து— பழைய நூறு — பழைய ஆயிரம் என்னும்

பொருளில் தொன்பது (ஒன்பது) - தொண்ணூறு - தொள்ளாயிரம் என்னும் பெயர்கள் உருவாயின என்று கூறுவது சிறிதும் பொருந்தாதென மறுக்க.

எனவே, குறிப்பிட்ட ஒரு பகுதி - அதாவது, பத்தில் ஒரு பகுதி குறைந்த பத்து-குறைந்த நூறு-குறைந்த ஆயிரம் என்னும் பொருளிலேயே ஒன்பது - தொண்ணூறு - தொள்ளாயிரம் என்னும் பெயர்கள் உருவாகியுள்ளன என்னும் உண்மை நமது ஆராய்ச்சியால் போதரும். இந்த ஆராய்ச்சிக்கு இலத்தீன் எண் அமைப்பு முறைகள் சில ஒத்திருப்பதும் நமக்குத் துணைபுரிகிறது. இது குறித்து ஆராய்ச்சியாளர்கள் இன்னும் நன்கு எண்ணிப் பார்ப்பார்களாக!

* * *

பிற்சேர்க்கை :- 'தொண்டு' என்பது 'ஒழுக்கம் கெட்டவர்' என்னும் இழிபொருளையும் தருவதால் அதன் இடத்தை 'ஒன்பது' பிடித்துக்கொண்டது என முன்னர்க் (பக்கம்-16) கூறப்பட்டுள்ளது. 7 என்னும் எண்ணைக் குறிக்கும் 'ஏடு' என்னும் தெலுங்குச் சொல் 'அழுகை' என்னும் தீப்பொருளையும் தருவதால், அதற்குப் பதிலாக, ஆறும் ஒன்றும் சேர்ந்தது $(6+1=7)$ என்னும் பொருளில் 'ஆறுன்னொகட்டி' என்னும் உயர் வழக்காறு தெலுங்கில் (ஆந்திராவில்) இருப்பது ஈண்டு ஒப்புநோக்கி மகிழ்தற்குரியது.

# கட்டுரைக்குக் கருத்து வழங்கிய கருவூலங்கள்

1. தொல்காப்பியம் — எழுத்ததிகாரம் — குற்றியலுகரப் புணரியல் — 40,58 நூற்பாக்கள்.

2. தொல் — எழுத்து — நச்சினார்க்கினியம் குற்றியலுகரப் புணரியல் 40 — தேவநேயப்பாவாணரின் அடிக்குறிப்பு— கழகப் பதிப்பு—சென்னை-1955.

3. தொல் — பொருள் — செய்யுளியல் — பேராசிரியம் — 101; கழகப் பதிப்பு — சென்னை - 1951.

4. மலைபடுகடாம் — வரி 21 (பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார்.)

5. ஆசிரிய மாலை (ஒரு தமிழிசை நூல்)

6. பரிபாடல் : 3 – 79 (கடுவன் இளவெயினனார்)

7. ஏலாதி : 72 (கணிமேதையார்)

8. நன்னூல் – எழுத்ததிகாரம் – எழுத்தியல் – 6.

9. நன்னூல் – எழுத்ததிகாரம்— உயிரீற்றுப் புணரியல் 44 – மயிலைநாதர் உரை — உ. வே. சா. பதிப்பு— சென்னை — 1946.

10. திருப்புகழ் – 289 (அருணகிரிநாதர்) – த. சுப்பிரமணிய பிள்ளை பதிப்பு – சென்னை – 1909.

11. சீவகசிந்தாமணி – காந்தருவதத்தையார் இலம்பகம்–4.

12. கம்பராமாயணம் – அயோத்தியா காண்டம் – சித்திர கூடப் படலம் – 29.

13. கம்பராமாயணம் – யுத்த காண்டம் – நிகும்பலை யாகப் படலம் – 123.

14. அகநானூறு: 149-3 ; 275-11.

15. புறநானூறு: 333-5.

16. தமிழ் இலத்தீன் பாலம்–சுந்தர சண்முகனார் — புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், புதுச்சேரி-1 ([illegible])

17. இலத்தீன் இலக்கண நூல்.

# சுந்தர சண்முகனாரின் நூல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருக்குறள் தெளிவு | ... | 2 | 00 |
| 2. | மலர் மணம் | ... | 4 | 50 |
| 3. | வீடும் விளக்கும் | ... | 2 | 00 |
| 4. | வாழும் வழி | ... | 2 | 50 |
| 5. | தமிழ் அகராதிக் கலை (தமிழக அரசின் பரிசுபெற்றது) | ... | 8 | 00 |
| 6. | வள்ளுவர் இல்லம் | ... | 4 | 00 |
| 7. | பணக்காரர் ஆகும் வழி (இந்திய அரசின் பரிசுபெற்றது) | ... | 1 | 00 |
| 8. | தமிழர் கண்ட கல்வி | ... | 3 | 00 |
| 9. | இன்ப வாழ்வு | ... | 3 | 50 |
| 10. | செந்தமிழ் ஆற்றுப்படை | ... | 0 | 50 |
| 11. | தமிழ் இலத்தீன் பாலம் | ... | 7 | 50 |
| 12. | வாழ்க்கை ஓவியம் | ... | 0 | 35 |
| 13. | நாலடியார் நயவுரை | ... | 2 | 00 |
| 14. | போர் முயற்சியில் நமது பங்கு | ... | 0 | 30 |
| 15. | History of Tamil Lexicography | ... | 1 | 50 |

## அடுத்த நூல்:

| | | | |
|---|---|---|---|
| கெடிலக்கரை நாகரிகம் —51 படங்களுடன் | ... | 15 | 00 |

கிடைக்குமிடம்:


**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**

61-C, வைசியர் தெரு, புதுச்சேரி-1

Pondicherry-1. South India.